ஆஸாத்

AZAD

THE ONLY POLITICAL TAMIL MAGAZINE
KUMBAKONAM

FOUNDER: HAJEE M. ABDUR RAHMAN SAHIB • EDITOR: MAULANA ABDUL HAKEEM



வருட சந்தா ரூ. 3—0—0] 26-3-51. [தனி பிரதி அணா 0—2—0

அறிக்கை.

ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருடசந்தா (24 பிரதிகளுக்கு) ரூ. 3
(ரூபாய் மூன்று மட்டும்)

இதுவரையில் அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர் மூலம் அனுப்பி ஆதரிக்கவேண்டுகிறோம்.

*

மானேஜர்:- "ஆஸாத்"
கும்பகோணம்.

குடந்தையில் குற்றாலக் குளுமை.

குணம், மணம், சுவைமிக்க, ஒவ்வொரு சொட்டும் இனிய அமிர்தம் கோடை வெப்பத்தால் குழம்பிய இதயத்தை கணப்பொழுதில் சாந்தியளிக்கும் ஷர்பத் பானங்கள் உயரிய சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு நயமான விலையில் கிடைக்கும்.

வாருங்கள்! வந்து களிகூறுங்கள்!! சுகமடையுங்கள்!!!

**பாம்பே ஐஸ் கூலிங் அண்டு
ஷர்பத் கம்பெனி,**

103 பெரிய தெரு
பிராஞ்சு:- பெரியகடை வீதி, } கும்பகோணம்.

'AZAD' NATIONAL TAMIL BI - MONTHLY KUMBAKONAM.

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறைபத்திரிகை கும்பகோணம்.

மலர் 4 | விக்ருதி௵ பங்குனி-மீ 13உ (26-3-1951) ஹிஜ்ரி 1370 ஜமாத்-உல்-ஆஹிர் 17உ திங்கட்கிழமை | இதழ் 3

ARA PUBLI

உணர்ந்து வெளியேறட்டும்.

(R. ராமசீனிவாசன், திருமலைராயன்பட்டினம்.)

இந்தியாவில் முகலாய சாம்ராஜ்யம் க்ஷீணித்து ஐரோப்பிய ஆளுகைக்குள் இந்தியா அகப்பட்டதி லிருந்து இந்தியமக்கள் தங்கள் விவகாரங்களை தாங்களே கவனித்துக்கொள்ளும் உரிமையை இழந்தனர். அரசி யல் துறையில் அடிமைகளாயினர். இந்த சகாப்தம் மின்னல் மறைவதுபோல் 1947ம் வருடமத்தியில் முடி வடைந்தது. இந்தியாவின் பெரும்பாகத்தை ஆண்டு வந்த பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேறினர் பாரதநாட்டின் சுதந்திரக் கோட்டை தேசமக்களின் இரத்தவெள்ளத்திலே எழுப்பப்பட்டது.

வியாபார நிமித்தம் இந்தியாவுக்கு வந்தவர்களுள் பிரஞ்சுகாரர்களும் ஒருவர் ஆசியாவின் தேசிய எழுச் சியை உற்றறிந்து பிரிட்டிஷார் வெளியேறிவிட்டபோது பிரஞ்சுக்காரர்களும் தென்னிந்தியாவில் தங்களுக்கு சொந்தமான புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனம் ஆகிய ஊர்களை விட்டுவிடுவதுதான் நீதியும் நேர்மையும் மாகும், இந்தியாவிலுள்ள மக்களுடன் சகல துறைகளி லும் பிணைக்கப்பட்ட பிரஞ்சிந்திய மக்கள் தங்கள் தாய கத்துடன் சேர்ந்து வாழவே விரும்புகின்றனர். ஆகவே இந்தியாவை விட்டு வெளியேறுங்கள் என்று பிரான்ஸ் நாட்டுக்கு கூறுகிறோம். சுதந்திரம், சமத்துவம் சகோத ரத்துவம் என்ற கொள்கைகளை வகுத்து புரட்சி வெள் ளத்திலே குடியரசை உருவாக்கிய பிரஞ்சு மக்களின் சந்ததியார் தென்னிந்தியாவில் பிரஞ்சு ஆதிக்கத்தை வாபஸ்பெற தயங்குகின்றனர்.

சர்வதேச அரங்கில் ஆசியா முக்கிய ஸ்தானம் வகிக்கின்றது. ஆசியாவின் முன்னேற்றத்திற்கு பெரி தும் உதவிசெய்யக்கூடியது இந்தியதேசம். இந்தியா தனது ஐக்கியத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் இந்நிலையில் அந்நியருக்கு சில இடங்களை விட்டு வைப்பது என்பது அதுவும் துறைமுகங்களை விரும்பத்தக்கதல்ல உலகத் தில் நிகழும் மாறுதல்களையும் காலபோக்கையும் அனு சரித்து தனது ஏகாதிபத்ய கொள்கையை மாற்றிக் கொள்ளும் படி பிரான்ஸ் நாட்டுக்கு கூறுகிறோம்.

ஒருகாலத்தில் பிரிட்டிஷாருக்கு அடிமைப்பட்டு கிடந்த அமெரிக்கா, 2வது உலகமகாயுத்தத்தின்போது அமெ ரிக்காவின் 49 வது சமஸ்தானம் பிரிட்டன், என்று அழைக்கும்படியான நிலைஏற்பட்டது. ஐரோப்பாவின் நோயாளி'' என்று அழைக்கப்பட்ட துருக்கி கமால் பாக்ஷாவின் தலைமையில் முன்னேறியது.

உலகெங்கும் தேசியம் வளர்கிறது அடிமை மனப் பான்மை அகல்கிறது. மக்களிடையே எழுச்சிஅதிக மாகிறது. உறங்கி கிடந்த மக்கள் உறக்கம் தெளிந்து உரிமையைக் கேட்கிறார்கள். பலாத்காரத்தால் பறித்துக் கொண்டவர்கள் மனம் பதைக்கிறது. பிரஞ்சுக்காரர் களின் நிலையும் அதுதான். இந்தியாவின் செல்வங்களை சுரண்டி, சுரண்டி ருசித்த பிரஞ்சுக்காரர்கள் எளிதில் விட்டுப்போக கலங்குகிறார்கள். இதனைமறைத்து வைத் துக்கொண்டுதான் இந்திய அரசாங்கத்துடன் ஓர் ஒப் பந்தம் செய்து கொண்டார்கள். அதாவது ஒருவாக் கெடுப்பு நடத்தி அதில் மக்கள் யாருக்கு ஓட்செய்கிறார் களோ அதன் பிரகாரம் நடப்பது என்று. இந்த வாக் கெடுப்பு (Refendam) ஒப்பந்தம் நடந்து ஏறக்குறைய மூன்றுவருடங்களாகின்றன இன்னும் பிரஞ்சுக்காரர் களின் ஆதிக்கம் அகலவில்லை. இந்த ஒப்பந்தத்தின்படி சந்திர நாகூரிலே ஒரு வாக்கெடுப்பு நடத்தினார்கள். தேர்தல் தில்லுமல்லுகளில் கைதேர்ந்தவர்களான பிரஞ்சு காரர்கள் தேர்தலை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள எல்லா ஜனங்களையும் கையாண்டனர். சர்வதேசபார் வையாளர்கள் என்று இருபொம்மைகளை அழைத்து வந்தனர். ஆதிகாலந்தொட்டு தேசபக்தியில் நிகரற்றவர் மக்களிடேயே, பிரஞ்சுக்காரர்கள் யாரையும் தங்கட்கு கையாட்களாக உபயோகித்துக்கொள்ள முடியவில்லை. நேதாஜி சுபாஷ்சந்திரபோஸைப் பெற்று உயர்வடைந்த வங்கத்தின் ஒருபகுதியான சந்திரநாகூர் இந்தியாவி லுள்ள பிரஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு சாவுமணி அடித் தது. அதனை நற்பாடமாகக் கொண்டு இனியும் அம் மாதிரி அவமானகரமான செயலில் ஈடுபடாமல்பிரான்ஸ் தென்னிந்தியாவிலிருந்து தன்னாட்சியை வாபஸ்பெறு

வதுதான் நலம்:- கண்யம். இதனைபடுத்து ஒற்றுமையின் மையை வளர்த்து, ஒரு சில இந்தியர்களை தங்களுக்கு ஆதாரவாக்கிக் கொண்டு தனது ஆதிக்கத்தை நிலைக்கச் செய்ய பிரான்ஸ் சூழ்ச்சி செய்கிறது. 19ம் நூற்றுண்டில் ஆஸ்டிரியாவின்பற்றிய இவ்வரசாங்ககொள்கையை பிரான்ஸ் இங்கும் கையாளுகிறது. ஆனல் வியன்னு எழுச்சி ''அக்கொள்கையை எவ்வாறு ஆக்கியது என்பதை பிரஞ்சு அதிகார வர்க்கத்துக்கு கூறி எச்சரிக்கிறேன்.

தென்னிந்தியாவில் இன்னும் பிரஞ்சு ஆட்சி நீடிப்பது ஆபாத்தானது, அவமானகரமானது. இது தமிழ் நாட்டுமக்களைத்தான் பெரிதும் பாதிக்கிறது. சரித்திர புகழ்பெற்ற தமிழர்கள், இந்நிலையை நீடிக்க அனுமதித்துவாளா விருப்பதா? அல்லனுரும் தங்கள் சகோதரர்களின் இன்னல்களை அவர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து, பிரஞ்சுக் காரர்களை விரட்ட வழி வகுக்க வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்துக்கட்டிய தமிழரினம் வீருகொண்டெழுந்தால் முடியாதது ஒன்றுமில்லை. பேச்சு வார்த்தை என்ற சாக்கில் பிரஞ்சிந்திய பிரச்சனையை தள்ளிப் போட்டுக்கொண்டே போகும் பிரஞ்சு ஏகாதிபத்யம் சீக்கிரம் வெளியேருவிடில் கொந்தளிக்கும் மக்கள் சக்தி, கொதிப்படைவது நிச்சயம். ஜன நாயகத்தை மதிப்பதாக கூச்சலிடும் பிரான்ஸ், மக்கள் சக்தியிலே நம்பிக்கை கொண்ட பிரான்ஸ், **உணர்ந்து வெளியேறட்டும்.** ஜெய்ஹிந்த்!

அமெரிக்க ஜனநாயகத்தின் அவல நிலை

ஜப்பானில் மக்-ஆர்தர் ஜமீன்தார், முதலாளிவர்க்கத்தினருக்கு ஜனநாயக முறையை போதிக்க விரும்புகிருர். ஜர்மனியிலும், ஜனநாயக அடிப்படை கொள்கைகளின் மீது நாட்டின் நிர்வாகத்தை அமைக்க அமெரிக்கா ஆசைப்படுகிறது ஆனல் தற்காலம் எவ்வித ஜனநாயகம் ஆட்சி செய்கிறது என்று சமீபத்தில் அமெரிக்கா சென்று நிலைமையை நேரில் கண்டவர்கள் அறிவர் அமெரிக்க முதலாளித்துவத்துடன் ஒத்துவராத முற்போக்கு விஷயங்கள் யாவும் கம்யூனிஸ்டு நடவடிக்கைகள் அல்லது அமெரிக்க எதிர்ப்பு இயக்கம் என்று நினைக்கப்படுகின்றன முதலாளிகளின் ஆதிக்கத்திலுள்ள செய்திப் பத்திரிகைகளும், ரேடியோ சாதனங்களும், சோவியத் ரஷ்யாவுக்கெதிராக துஷ்ப்பிரசாரம் செய்து விஷம் கக்குகின்றன. இப்பிரசாரத்தினல் ரஷ்யா அமெரிக்காவின் பரம வைரி என்ற எண்ணம் அமெரிக்க மக்களிடை வளர்கிறது. அரசியல் அதிகாரங்கள் யாவற்றையும் கொண்ட ராணுவ அதிகாரிகள், தினசரி ரஷ்யாவுக்கெதிராக கயிறுதிருத்தி பொய்ப் பிரசாரம் மக்கள் உரிமைகளை பறிக்கச்செய்கின்றனர் துஷ்ப்பிரச்சாரம் பாடசாலை கலாசாலை, சர்வகலாசாலை முதலிய எல்லாவிடங்களிலும் நடைபெற்று வருகிறது. வாலிபர்களுக்கு ராணுவபயிற்சியளிக்கப்படுகிறது. பேராசிரியர்கள், அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் நாசவேலைகளிலும் ஈடுபடமாட்டார்கள் என்று பிரமாணம் எடுக்க வற்புறுத்தப் படுகின்றனர் ஓர் சிறு சந்தேகம் ஏற்படினும் சந்தேகப் பேர்வழி உடனே தன் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு விடுவான். சிகாகோ சர்வகலாசாலை சான்ஸலர் டாக்டர் ஹசின்ஸ் தவிர மற்ற கலாசாலை அதிகாரிகள் அனைவரும் அனேகமாய் ராணுவத்தினரின் பலாத்காரத்திற்குள்ளானவர்களே இந்நிலைமைக் கண்டு மனம் வெதும்பிய ஹட்சின்ஸ், "பொதுவுடமை பெருவெள்ளம், போலீஸார், ராணுவத்தினர் முதலியவர்களால் தடைபடாது இக்காரியத்தில் வெற்றிபெறவேண்டுமாயின், பொதுவுடமை வளர காரணமாயுள்ள குறைகள் நீக்கப்படவேண்டும்" என்று சமஷ்டி சர்க்காருக்கு தெரியப்படுத்தி இருக்கிருர். பலாத்கார நேசர்கள் டாக்டர் அவர்கள் கூறிய புத்திமதிகளின்படி நடந்துகொள்வார்களா! சர்வ கலாசாலை மதிற்சுவர்கட்குள் பொதுவுடமை-முதலாளித்துவம் என்ற பிரச்னைகளை விவாதிக்க முடியவில்லையாயினும், அமெரிக்க பொருளாதார முறை மாணவர்களிடையே அவநம்பிக்கையை வளர்க்கபோதுமானதாகும்.

நீக்ரோக்களிடம் அமெரிக்க வெள்ளையர் நடந்கொள்ளும் விதம் காட்டுமிராண்டித்தனம் என்றே கூறவேண்டும். சமஷ்டி அரசியலில் இனம் நிறம் பாகுபாடு சட்ட விரோதமானதென்று கூறப்படினும், அமெரிக்க வெள்ளையர் கோர்ட்டுகளுக்கு பதிலாகத் தாங்களே கொலை செய்துவிடுவது உத்தமம் என்று கருதுகிருர்கள். செயலிலும் அதை நிரூபித்து விடுகிருர்கள். இத்துரோக செயலில் அவர்கள் வெட்கப்படுவதுமில்லை யாருக்கும் அஞ்சுவதுமில்லை மானிட சமுதாயமே வெட்கித்தலைகுனியத்தக்க இக்கொடூர செயல்களின் செய்திகள் அமெரிக்க பத்திரிகைகளில் நிறைய காணலாம் தென் பிரதேசங்களில் இக்கொடூர செயல்கள் மிக மலிந்துள்ளன; வெளிப்படையாய் சர்க்கார் சட்டங்கள் மீறப்படுகின்றன மக்கள் கொண்டுள்ள வேறுபாடுகளை நீக்க சர்க்கார் சட்டங்

களால் இயலவில்லை என்றே தோன்றுகிறது. அநாகரீகமானதும் காட்டுமிராண்டித்தனமானதுமான இனவேறுபாட்டை நீக்க ஜனாதிபதி தன் முழு சக்தியும் கொண்டு பன்முறை முயன்றார், ஆனால் தன் சகாக்களில் பலருடைய கடும் எதிர்ப்பே அவருக்குக்கிடைத்தது பல சகாக்கள் அவருடன் ஒத்துழைப்பதை விட்டு காங்கிரசிலும் பலமாய் எதிர்த்தனர். அமெரிக்க நீக்ரோ சட்டப்பிரகாரம் அத்துரதிர்ஷ்டவாதிகள் டிராம், பஸ், ரயில் போக்குவர சாதனங்களில் முதல் வகுப்பின் பிரயாணம் செய்வதை தடை செய்யப்பட்டிருக்கின்றனர். பொதுஜன ஹோட்டல்களில் அவர்கள் புகக்கூடாது நகர மண்டபத்தில் கூட்டங்கள் நடத்தக் கூடாது. அவர்களுக்காக விலக்கப்பட்ட தனி கலாசாலைகளன்றி மற்ற கலாசாலைகளில் கல்வி பயிலமுடியாதவாறுவற்புறுத்தப்படுகின்றனர். ஆனால் கல்விச் சாதனங்கள் யாவருக்கும் சம உரிமையுள்ளவை என்றே சட்டம் கூறுகிறது. கருப்புப் பேராசிரியர்கள் எத்தகைய மேதாவிகளாயினும் நீக்ரோக்கள் கலாசாலைகளிலேயே தொண்டுபுரியலாம். ஹார்வர்டு சர்வகலாசாலைத் தலைவர் டாக்டர் ஹார்லே ஜான்ஸன் கறுப்பர்களுக்குப் பிறந்தவராகையால் மற்ற கலாசாலைகளில் நுழையவும் தடை செய்யப்பட்டுள்ளார் அகில உலகிலும் தம்பட்டம் அடிக்கப்படும் அமெரிக்க ஜனநாயகம் இதுவே. சிகாகோ நியூயார்க் போன்ற பெரிய பட்டணங்களில் நீக்ரோ பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துரதிர்ஷ்டவாதிகள் அங்கேயே வசிக்கவேண்டும். நகரத்தின் மற்ற பாகங்களில் பிரவேசிக்க அவர்களுக்கு உரிமை கிடையாது அசுத்தமும், ஆரோக்கியக் குறைவும் அதிகம் கொண்ட அப் பண்ணைகளைப் பார்க்குமளவில் இந்திய ஹரிஜனச்சேரிகளே நம் நினைவுக்கு வரும் அத்துடன் அச்சாபக்கேட்டை ஆழப்புதைக்க மஹாத்மா தன் ஆயுள்பர்யந்தம் போராடியதும், அவரது உத்தம தியாகங்களும் நம் கண்முன் காட்சியளிக்கும்.

பொருளாதார சமத்துவம் நிலவும் வரை, ஜனநாயக அரசியல் சமத்துவம் சக்திபெற முடியாதென்பதை அமெரிக்கா அறியவேண்டியது அவசியம். அமெரிக்காவில் மூன்று நபர்களுக்கு ஒன்று வீதம் மோட்டார்கள் உள்ளன என்பது உண்மை, ஆனால் முதலாளி-தொழிலாளிக்குமிடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டால் சித்தம் குலைந்துவிடுகிறது ஓர் மத்தியதர தொழிலாளி 250·டாலர் சம்பாதிக்கிறான். ஆனால் ஒரு முதலாளியின் வருமானமோ கோடிக்கணக்கிலும் அடங்கக்கூடியதல்ல ஜனாதிபதி ட்ரூமன் மாளிகையில் செல்வம் குவிந்து கிடந்தாலும் சுமார் 50.லட்சம் பேர் வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கி தவித்துக்கொண்டிருக்கின்றனர்.

மாட்டுத்தோல்

(H. A.

25. பிப்ரவரியன்று கராச்சியில் இந்தியா-பாக் வர்த்தக ஒப்பந்தம் நிறைவேறி விட்டது. அதன்படி ஜூன் 1952 முடிய இந்தியா பாகிஸ்தானுக்கு 12 லட்சத்து50ஆயிரம் மாட்டுத்தோல் சப்ளைசெய்யவேண்டும். இவ்வேற்றுமதி ஷரத்தை மனதிலிருத்தியபின்,26 ஜன:யன்றுபார்லிமெண்டில் சேட் கோவிந்ததாஸ், மிஸ்டர் பார்கோ இருவரும் பிரேரித்த தீர்மானங்களை ஆராயவேண்டும். அத்தீர்மானங்கள் கால் நடைகள் பாதுகாக்கப்படவேண்டுமென்று வற்புறுத்துகின்றன "பசு,காளை கன்று எருமை எருது முதலியவை வதைசெய்யப்படுவதை அடியோடு தடைசெய்து விடவேண்டும்" என்று சேட் கோவிந்ததாஸ் பிரேரணை கூறுகிறது. மிஸ்டர் பார்கோ ஒன்றுக்கும் உதவாத கால்நடைகள் வதைசெய்யப்படுவதை தடைசெய்யவில்லையாயினும் கசாப்பு கடைகளுக்கு லைசென்சுவழங்க கூறப்பட்டுள்ள ஷரத்துகளால் கால் நடை (அவை எத்தகையதாயினும்) வதைசெய்வது முடியாதகாரியமாக்கிவிடும் விதத்தில்பிரேரித்துள்ளார்" இவ்விஷயமாய் சேட்ஜி கூறியவை அநேகமாய் பொருளாதார அடிப்படையை குறிக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்வோம் உணவுதானியமின்றிமக்கள் மடிவதினின்றும் காப்பாற்ற உணவுகிடைக்காதபோது, 'உற்பத்தி பெருக்கம் திட்டப்படிநாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை ஒன்றுக்கும் உதவாத கால்நடைகள் உலைவைக்க விடுவது எந்த பொருளாதாரக் கொள்கை என்பதை சேட்ஜியே விளக்கவேண்டும் காடுகளை பண்படுத்தி மக்களுக்கு உணவு தேடித்தர திட்டங்கள்நிறைவேற்றும்சேட்ஜிகாப்பாற்றமுற்படும் கால் நடைகளுக்கு தீவனம் எங்கிருந்து கொணர்வது. நிலங்களில்உற்பத்தியாகும் யாவற்றையும் கால்நடைகளுக்கு காணிக்கையாயளிகக எந்தநாடும்முற்படமுடியாது. மேலும்மக்கள் பசியைத்தீர்க்க தானியமும், தொழிலை,சாகவிடாது காப்பாற்ற தோலும் அயல்நாடுகளிலிருந்து வாங்க எந்நாடும் விரும்பாது. விளைச்சல் அனைத்தும் யந்திரங்களால் நடைபெறும் நன்னாளும் இந்தியாவில் வரப்போகிறது என்று கூறுகிறார்கள் அப்போது கால்நடைகளை என்ன செய்வது? சேட்ஜியும், பார்கோவும் காலப்போக்குடன் ஒத்துபோகவேண்டும். அல்லது சம்பிரதாயங்களை மேற்கொள்ளவேண்டும். ஒருசமயத்தில் இரு குதிரைமீது சவாரி செய்வது ஆபத்து மிகுந்ததாகும். ஆகவே மேற்கூறியநிலைமையில், உணவு தான்யம், தோல் முதலிய தேவைகளை அனுசரித்து, பலனளிக்கும் போக்கைமேற்கொள்வதுநம்சர்க்காரின் கடமையாகும். அப் பொருள்களுக்காக அயல் நாடுகளிடம் கையேந்தித் திரிவது இந்தியநாட்டின் பெருமைக்குகந்ததல்ல.

MAY 1955

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறை பத்திரிகை

மலர் 4 } 26—3—1951 திங்கட்கிழமை { இதழ் 3

இந்தியா—பாகிஸ்தான் வியாபார ஒப்பந்தம்.

சமீபத்தில் இந்தியா—பாக்கிடையே நிறைவேறிய வர்த்தக ஒப்பந்தம் இருநாடுகளின்தேவைகள் பலவற்றையும் வழி செய்வதுடன் வருங்காலத்தில் நல்ல நேச உறவு ஏற்படவும் அஸ்திவாரமிடுகிறது. இவ்வொப்பந்தம் பதினாறு மாதங்களுக்கே செய்யப்பட்டதாயினும், இருதரப்பாரும் நேர்மையுடன் நடந்து கொண்டால் காலவரம்பின்றி நிலைக்கக்கூடும். அதன்படி இந்தியாவுக்கு பாக்கிலிருந்து சணல் பருத்தி உணவுதானியங்கள் கிடைக்கும். அதற்கு பதிலாக நிலக்கரி, சிமிட்டி, எஃகு துணி முதலியவை பாக்.குக்கு கிடைக்கும், ஜூனுடன் முடிவடையும் நான்கு மாதங்களில் 10-லட்சம் சணல் பொதிகள் இந்தியா வந்துசேரும். கையிருப்பு சணலில் 1- லட்சத்து 80-ஆயிரம் டன்களை பாக்-சர்க்கார் இந்தியாவுக்காக ஒதுக்கியுள்ளதாய் செய்திகள் கூறுகின்றன. இது உடனடியாக இந்தியாவுக்கு அனுப்பப்படும். உடன்பாடு பிரகாரம் ஜூலை 1951-முதல்ஜூன் 1952முடிய மேலும் 25-லட்சம் சணல் பொதிகள் இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும். இந்திய நெசவாலைகள் நேரடியாக பாகிஸ்தானினின்றும் பருத்தி வாங்கிக்கொள்ளலாம். ஆனல் ஜூன் முடிய நான்கு மாதங்களில் 1-லட்சம் பருத்தி பொதிகளுக்குமேல் பாக்-ஏற்றுமதி செய்ய முடியாது. இந்த நான்கு மாதங்களுக்குப்பின் மாதாமாதக் கோட்டா அனுமதிக்கப்படும் அக்கோட்டா இவ்வளவே என்றில்லை முடிந்த அளவு வாங்கிக் கொள்ளலாம். இன்றுவரை பாக்-வேறு எந்த நாட்டுக்கும் பருத்தி ஏற்றுமதி செய்வதாய் ஒப்பந்தம் செய்யவில்லை. அவ்வித ஒப்பந்தம் ஏற்பட்டால் குறைந்த அளவு 4-லட்சம் பொதிகளாவது இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யவேண்டியது ..ரத்து அதேவிதம் முதல் நான்குமாதங்கள் 2½-லட்சம் டன் அரிசியும் மற்றும் ஓராண்டில் 2¾-லட்சம் டன் கோதுமை 1½ லட்சம் டன் அரிசியும் பாக்- இந்தியாவுக்கு கொடுத்துதவும் மேற்கூறிய பொருள்களுக்குப் பதில் முதல் நான்கு மாதங்களில் 6-லட்சம் டன்னும் மற்றும் ஓராண்டில் 15-லட்சம் டன்னும் நிலக்கரி இந்தியாவினின்றும் பாக்-குக்கு ஏற்றுமதியாகும் 50-ஆயிரம் டன் இரும்பு எஃகு அவைகளால் செய்யப்பட்ட சாமான்கள் முதலியவை பாக்-குக்குஇந்தியா அளிக்கும் அதில் 8-ஆயிரம்டன் முதல் நான்கு மாதங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது முதல் நான்கு மாதங்களில் 25-ஆயிரமும், மற்றும் 12-மாதத்தில் 75.ஆயிர டன் சிமிட்டி பாக்-பெறும். அதேபோல் கைத்தரி லுங்கிகள் மேல் துண்டுகள் முதலியவை 15-ஆயிரம்மூட்டைகள் பாகிஸ்தானுக்குக் கிடைக்கும் அதில் 10-ஆயிரம் மூட்டை வெறும் லுங்கியாகும் மில்துணி 75-ஆயிரம் மூட்டைகளும் அதில் 15-ஆயிரம் மூட்டை நூலும் பாகிஸ்தானுக்கு இந்தியா சப்ளை செய்யும் மேற்கூறிய பொருள்கள் தவிர மேலும் நூறுரக பொருள்கள் பரஸ்பரம் இந்தியா பாக் கிடையே வியாபாரத்திற்கு அனுமதிக்கப் பட்டிருக்கின்றன உதாரணமாக வரும் நான்கு மாதங்களில் 2½-லட்சமும் மிகுதி ஓராண்டில் 10-லட்சம் மாட்டுத் தோல் இந்தியாவிடம் பாக் வாங்கும்

இவ்வொப்பந்தம் அனுமதிக்கும் வர்த்தகம் சுமார் 250-கோடி ரூபாய்க்கு நடைபெறும் என உத்தேசிக்கப்படுகிறது பாகிஸ்தான் இந்தியாவுக்கு 150-கோடி ரூபாய் பொருமான பொருள்களையும் இந்தியா பாக்குக்கு நூறு கோடி ரூபாய் சாமான்களை அனுப்பிவைக்கும் அதனல்50-கோடி ரூபாய் சாமான்களை இந்தியா இறக்குமதி செய்யவேண்டிவரும் ஆனல் பாகிஸ்தான் விற்கும் பருத்தி, சணல் முதலியவற்றல் தயாராகும் உற்பத்திப் பொருள்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் இந்தியா நல்ல லாபமடையும் என்பதை மறந்துவிடலாகாது. மேற்கூறிய 50-கோடியைவிட லாபம் மிக அதிகம் என்பதை நினைக்கையில் நாம் திருப்தியடைந்தே தீரவேண்டும் இவ்வொப்பந்தத்தால் பாக். ரூபாய் மதிப்பை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது மிக முக்கிய விஷயம். இவ்விஷயமாய் நிதிமந்திரி கூறியுள்ளது உண்மை நிலைமையை தெளிவாக்கக்கூடியதாகும்

'இவ்வொப்பந்தம் நிறைவேறியதுடன் செலாவணி விஷயம் எதிர்நோக்கியது பொருள்களுக்கு விலை கொடுத்து வாங்கவேண்டிய நாணயத்தின் மதிப்பை தீர்மானிக்கவேண்டியது அவசியமாகியது, பாக். ரூபாய் மதிப்புவிஷயம் நெடுங்காலமாய் உலக பாங்க் ஆராய்ச்சியிலிருக்கிறது என்பதை சபையோர் அறிவர். ஆனல் இன்றுவரை எவ்வித முடிவும் ஏற்படவில்லை. இன்று உலகத்தை நோக்கியிருக்கு அவந பிக்கை மிகுந்த நிலைமையால் கச்சாப்பொருள் உற்பத்தி அதிகமுள்ள நாடுகளின் நிலைமை சீர்பட்டுவிட்டது பாகிஸ்தானு அவற்றில் ஒன்று........கொரிய யுத்தத்தினல் கச்சாப்பொருள் தேவை மிக அதிகமாகிவிட்டது. விலைகளு மிக உயர்ந்துவிட்டன. ஆகவே அவசரகால நிலைமையால் பாக்- நாணய மதிப்பை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசிய ஏற்பட்டுவிட்டது'' என்றர் நிதிமந்திரி.

பாக் ரூபாய் மதிப்பை ஏற்றுக்கொண்டதை பலர் குறை கூறுகின்றனர். அம்ரித்பஜார் பத்திரிகையும்

'இதையேன் முதலிலேயே ஏற்றுக்கொள்ளாது வர்த்தகத்தை முட்டுக்கட்டையிட்டனர்'' என்று எழுதுகிறது சர்வதேச நிலைமையையோ, இந்தியாவின் பொருளாதார நெருக்கடியையோ அறியாதவர்களே இவ்விதம் குறை கூறமுடியும். 1949 செப்டம்பரில் ஸ்டர்லிங் நாடுகள், டாலர் பரிவர்த்தனைக்காக நாணய மதிப்பை குறைத்தபோது இந்தியாவும் குறைத்தது; பாகிஸ்தான் அவ்வித செய்யவில்லை ; ஆனால் நிலைமை இன்றுள்ளதைப்போல் அன்றில்லை. இந்திய பொருளாதார பிரச்னை இன்றுள்ளதைப்போலிருக்கவில்லை செப்-49-க்குப்பின் முடிவுற்ற ஆண்டில் ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாயிருந்தது, ஏற்றுமதியை விட 249-கோடி ரூபாய் அதிக இறக்குமதியாயிற்று என்பதை மறந்துவிடலாகாது. அதாவது வர்த்தகரீதியில் நாம் கடும் சோதனைக்குட்பட்டிருந்தோம அதனின்றும் வெற்றிகரமாய் மீள்வதே அவசியமாயிருந்தது. 49 ல் வல்லரசுகள் யுத்த முஸ்தீபுகளில் கச்சா பொருள்களை சேகரித்து வரவில்லையாகையால் கச்சாப் பொருள் உபரிதேசங்களில்விலையும் சகாயமாயிருந்தது பாக் கும் கச்சாப்பொருள் உற்பத்தி நாடாகும் ஆகவே அங்கும் விலைகள் மிக குறைந்திருந்தன. நாணய மதிப்பைக் குறைக்காததால் பாகிஸ்தான் கச்சாப்பொருள்களை வாங்குவோர் யாருமில்லாது போய்விட்டனர் இந்தியாவுடனும் வர்த்தகம் தடைபட்டுவிட்டது அதனால் கி. பாக். கில் சணல் குவிந்து கிடக்கலாயிற்று; அதேவிதமே பாக் கில் அபரிமிதமான கோதுமை உற்பத்தி பெரும வேதனையாகிவிட்டது. ஆனால் பாக்கின் நல்விதியால்சர்வதேச நிலைமைமாறுதலடைந்தது.கொரியயுத்தம் ஆரம்பித்தது உலக யுத்தமேகங்கள் உலகத்தை சூழ்ந்துகொண்டன கச்சாப்பொருள்களைக் குவித்து யுத்தமுஸ்தீபுகளில் சர்வதேசங்களும் முனைந்தன பாக் பொருள்கள் வாங்க போட்டி போடலாயினர் ஆகவே இந்திய வர்த்தகம் அதற்கு தேவையாயிருக்கவில்லை இந்தியாவை பல தொல்லைகள் பிடித்துக்கொண்டன

நாணய மதிப்பை குறைத்ததால் இந்தியாவுக்கு பெரும் லாபமே கிடைத்தது. செப்- 50-ல் முடிவடையும் ஆண்டில் இறக்குமதியைவிட ஏற்றுமதி 66-கோடி ரூபாய் அதிகம். அதாவது வர்த்தகம் நமக்கு சாதகமான முறையிலிருந்தது என்பது வெளிப்படை. செப் - 49-ல் முடிவடைந்த ஆண்டில் 249- கோடி ரூபாய்க்கு அதிக இறக்குமதி செய்யப்பட்டது ஆனால் செப்-50-ல் முடிவடைந்ததில் 66-கோடிரூபாய் அதிக ஏற்றுமதியாயிருக்கிறது. வர்த்தக துறையில் நாம் அடைந்த முன்னேற்றத்தை புறக்கணித்துவிட முடியுமா? ஆனால் மாறுதலடைந்துள்ள சர்வதேச நிலைமையையும் நாம் மறந்துவிடலாகாது. இன்று கச்சாப் பொருள்களைப் பெறுவது மிக கடினமாகி விட்டது மேலும் சாமான் போக்கு வரத்திற்கு கப்பல் வசதியில்லாதது பெருத்த ஏமாற்றம் அளிக்கிறது. அதனால் துணி, சணல்மில்களில் வேலை குறைந்து கொண்டே வருகிறது அதனால் உற்பத்தி பாதகமடைந்து வருகிறது. இத்தொல்லைகளை நாம் ஏற்றுக்கொள்ளவோ, நம் உற்பத்தி பொருள்களை வாங்கும் நாடுகளுக்குத் தேவையான அளவு இல்லை என்று கைவிரித்து விடவோ விரும்பவில்லை. இவ்வித நிலைமையில் பாக் குடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்வது மிக அவசியம் ஆகிவிட்டது அதன் ரூபாய் மதிப்பை ஏற்றுக் கொள்வதைத்தவிர வேறு வழியிருக்கவில்லை. உண்மையை உணர்ச்சியால் வெல்லமுடியாது. அவ்விதம் செய்ய நினைப்போர் வருங்காலத்தை இருள் சூழ்ந்ததாய்ச் செய்துவிடுகின்றனர் பாக் இந்திய வர்த்தக ஒப்பந்தம், உண்மையில் இந்திய நாட்டின் தெளிந்த அறிவுக்கும், தீர்க்க தரிசனத்திற்கும் எடுத்துக்காட்டாகும். இந்திய வர்த்தக ஸ்தாபனங்கள் எல்லாம் ஒப்பந்தத்தை வரவேற்றிருக்கின்றன பல அரசியல் தலைவர்களும் இந்தியாவின் போக்கை ஆமோதிக்கின்றனர்.

மேலும் பாக் ரூபாய் மதிப்பை ஒப்பந்தம் அளவிலேயே இந்தியா ஏற்றிருக்கிறது. மற்ற விஷயங்களில் அதை ஏற்கவில்லை அவற்றை பிறகு ஆலோசிக்கும், பேச்சு வார்த்தை நடந்து வருகிறது கூடிய சீக்கிரம் முடிவு ஏற்பட்டுவிடும் ஏனெனில் இவ்வொப்பந்தத்தால் ஏற்படும் சாதகமான நிலைமை எல்லாப் பிரச்னைகளுக்கும் சுமுகமானமுடிவு உண்டாக்கஉதவும் அதன் பிறகு இந்திய பாக் - மணியார்டர் முறை அமுலாகிவிடும் இரு நாடுகளிடையே பல நாளாய் தொடர்பின்றியிருக்கும் ரயில் தொடர்பும் ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கையும் வலுத்து வருகிறது ஏனெனில் ஒப்பந்தப்படி இருபுறத்திலும் பரஸ்பரம் ஏற்றுமதியாகும் பொருள்கள் போக்கு வரத்திற்கு எல்லாவித அனுகூலங்களும் செய்து தருவதாய் இரு நாடுகளும் உறுதியளித்துள்ளன இவ் விஷயமாய் பேச்சு வார்த்தை நடைபெறுவதாய் நம்பகமான செய்தி கிடைத்திருக்கிறது ஆகவே நாம் ஒப்பந்தத்தை பூரணமாய் வரவேற்கிறோம் இரு நாடுகளிடையேயுள்ள பல்வேறு பிரச்னைகளுக்கும் ஒப்பந்தம் தீர்த்து வைக்கும் சூழ் நிலையையுண்டாக்கும் என்று நம்புகிறோம். இந்தியாவுக்கு சாதகமான ஷரத்துக்களையே நாம் எடுத்துக் கூறியுள்ளோம் ஆனால் பாகிஸ்தானுக்கும் உண்மையில் தக்கபலன் தரக்கூடியதே பாக் விவசாயி தன் உற்பத்திப்பொருள்களைவிற்க கவலைப்பட வேண்டிய அவசியம் இனி இருக்க முடியாது. நிலக்கரி இரும்பு இல்லாததால் முடிவு பெறாத பாகிஸ்தான் திட்டங்களுக்கும் நிறைவேறும் காலம் வந்து விட்டது. மின்சாரம்முதலிய முக்கிய திட்டங்களுக்கு முடிவு ஏற்பட்டுவிடும் கால்வாய் நீர் பாய்ச்சல் காரியங்களும் தங்கு தடையின்றி நடைபெற முடியும் வேலையற்றுக் கிடக்கும் பாக் தொழிற்சாலை புகைபோக்கிகள் இனி புகை மண்டலங்களை கிளப்ப முடியும் நிலக்கரி போன்ற குறைந்த விலைபொருளுக்கு பதில் எண்ணை போன்ற விலையுயர்ந்த பொருளை உபயோகிக்க வேண்டிய அவசியம் இனி பாகிஸ்தானுக்கு இருக்கமுடியாது அந் நாட்டு ரயில் என்சின்கள் தம் பழய ரூபத்தை மேற்கொள்ள முடியும்

முடிவாக இவ்வொப்பந்தம் இரு நாடுகளுக்கும் நல்ல பலனளிக்கக்கூடியது.

கொண்டாட்டமும் - திண்டாட்டமும்.

மன்னருக்கு மணம் — மக்களுக்கு மரணம்.

ஈரான் மன்னர் ரஸாஷா பஹ்லவிக்கும் 19-வயது அழகி சுரையா அஸ்பந்தியாரிக்கும் பிப்ரவரி 13உ வெகு சிறப்பாக திருமணம் நடைபெற்றது அவ் வைபவத்தை ஈரான் செய்தித்தாள்கள் விவரித்துள்ளதைப் படிக்கும் போது அராபியக்கதைகள் (Arabian Nights) நம் கண்முன் தோன்றுகின்றன. மணமகள் ஓர் அமீரின் திருக்குமாரியாவாள்.

திருமணம்போது அழகி சுரையா அஸ்பந்தியாரி, ஐரோப்பிய உடை கவுன் உடுத்தி மணவரையில் பிரவேசித்தார் வைரங்கள் பதிக்கப்பட்ட அவ்வுடையை காண கண்கள் கூசின 6000-ம் வைரங்கள் 15-லட்சம் வட்டவடிவ ஆபரணங்கள அக்கவுனில் பதிக்கப்பட்டிருந்தன. மேலே ஓர் வெள்ளியால் செய்யப்பட்ட சிற்றுடை (ஜம்பர்) அணிந்திருந்தார். நீண்ட கவுனை அழகிகள் பலர் தாங்கிவந்தனர் மன்னர் (மணமகன்) நீலநிற ஆடை அணிந்திருந்தார் அதில் பதிக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த வைரங்கள் கழுத்தைச்சுற்றி ஓர் மாலையைப் போல் காட்சியளித்தன. இது மணமகனுக்கு இரண்டாம் விவாகமாகும் முதலில் 1939 ல் அவர் எகிப்து மன்னர் ஷாஅல்பரூகின் தங்கை இளவரிசி பௌஜியாவை மணந்தார் ஆனால் 1949-ல் விவாகம் ரத்தாகிவிட்டது பத்துவயது இளவரசி ஷாஹ்நாஸ்பேகம் முதல்மனைவிக்குப் பிறந்தவள். மணவைபவம் முடிவுற்றதும் தம்பதிகள் மற்ற விருந்தினருடன் விருந்துண்ணலாயினர் பலவித உண்டிகளுடன், ஜர்மனி, பிரான்சு தேசங்களில் தயாரிக்கப்பட்ட மதுபானங்களுடன், மற்ற சாராய வகைகளும், தாராளமாய் பரிமாரப்பட்டன, திங்களன்று ஹாலந்தினின்றும் இரண்டு டன் மலர்கள் விமானத்தில் கொண்டுவரப்பட்டு கஸ்ரேகுல் ஸிதான் (அரண்மனை) அலங்கரிக்கப்பட்டிருந்தது. அம்மாளிகையிலேயே அகில உலகிலும் பிரக்யாதிபெற்ற மயிலாசனம் வைக்கப்பட்டிருந்தது

பேர்பெற்ற அமெரிக்க யாத்rீகர் மார்ஹேஹண்டஸ் என்பவர் சமீபத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து, இஸ்லாமிய நாடுகளின் மோசமான நிலைமையைக் கண்டு அவற்றை ஓர் புத்தகமாய் வெளியிட்டுள்ளார். அதன்பெயர் 'வருங்காலத்தைத்தேடி'' (Inquest of Future) யாகும் அவர் நெடுநாள் ஈரானில் தங்கியிருந்தார். ஏனெனில் அதுவே அமெரிக்கா—ரஷ்யாவுக்கிடையில் எலும்புத்துண்டமாயிருக்கிறது ஆகவே கிராமம் கிராமமாய்ச் சென்று பொதுமக்களின் பொருளாதார நாகரீக நிலைமையை நேரில் கண்டறிந்தார். ஈரானிய பொதுமக்களின் வறுமை மிகுந்த அவநிலைமையால் மனம் வெதும்பிய மார்— அந்நாட்டின் அரசியல் போக்கை ஆராய்ந்து, பொருளாதார சீர்கேட்டைக் காணக் கண்ணீர் வடித்துள்ளார், வளம் பொருந்திய, செல்வங்கள் அனைத்தும் பெற்ற அந்நாட்டு மக்கள் வறுமைக்காளாகி துன்பப்படுவதற்குக் காரணமென்ன? நிலைமையை எவ்விதம் சீர்செய்யலாம்? அந்நாட்டை எதிர்நோக்கியுள்ள பயங்கரமான எதிர்கால அழிவினின்றும் ஒரு பாவமுமறியாத மக்களை எவ்விதம் காப்பாற்றலாம்? என்பதையே பெரும்பாலும் ஆராயலானார்.

பிப் · 13-ந்தேதி அராபியக்கதைகளை நினைவூட்டும் திருமணவைபவம் நடந்தேறியகுலிஸ்தான் அரண்மனையுள்ள தெஹரானை வர்ணிக்கையில் அவர்எழுதியுள்ளதாவது:—

'மயானத்தைப் போல் அமைதி நிலவியுள்ள தெஹ்ரானே உண்மையில் கிழக்கு நாடுகளின் நிலைமையை எடுத்துக்காட்ட வல்லது, எத்தகைய கூக்குரலும் அதன் அமைதியைக்குலைத்து பிணம்போலுள்ள தெஹ்ரான் நகரை விழிப்புறச் செய்ய முடியாது இந்நகரத்தின் உண்மைநிலையை எடுத்துக் காட்டக்கூடியவை இங்குள்ள பிச்சைக்காரர்களும், நாய்களுமே ஆப்பிரிக்க. ஆசிய பிச்சைக்காரர்களில் தெஹ்ரானியன் அப்பாவியும் பொருமை சாலியுமாவான் தெருக்கள் சாலைகள், முச்சந்திகள் முதலிய எங்கிலும் குருடர், முடவர் நொண்டி முதலியவர்கள் அங்கரைக் காணலாம் நடைபாதைகளே அவர்கள் மாடமாளிகைகள். உட்கார்ந்த விடமே வீடு, படுத்த இடமே பள்ளியரை தூங்குகையில் தங்கள் குல்லாய்களை தலைமாட்டில் வைத்துவிடுவர். அதில் போவோர் வருவோர் பிச்சையடுவர்.''

வறுமை ஈரான் எங்கிலும பொதுவான அம்சமே எனினும், ஷிராஸ் நகரம் பிச்சைக்காரர்களின் களஞ்சியம் எனலாம் மற்ற நகரங்களில் குருடரும் முடவரும் பிச்சைக்காரர்களாயின், இந்நகரில் குடும்பம் குடும்பமாய் யாசகத்தை தொழிலாய்க் கொண்டுள்ளனர். வயோதிகர் வாலிபர் சிறுவர், சிறுமியர் ஆண் பெண் யாவரும் கூட்டம் கூட்டமாய் பிச்சை கேட்க புறப்படும் காட்சி காணவும் சகிக்க முடியவில்லை. சர்க்கார் தகவல்படி 50 ஆயிரம் ஷீராஸ் தொழிலாளரில் பதினையிரம்பேர் வேலையற்றவர்கள்.''

காஸ்பியன் கடலோர நகரமாகியகிலானைப்பற்றி கூறுகையில் அவர் கூறியுள்ளதாவது:- ஈரானில் விவசாய சீரழிவு பொதுவாக வருந்தவேண்டிய விஷயம். சராசரி $2\frac{1}{2}$ இரண்டரை எக்கர் நிலமே ஒவ்வொரு விவசாயி குடும்பத்திற்கும் உண்டு என்று கூறப்படுகிறது. இது நெல்விளையும் பிரதேசம் நெல் விளைக்க அதிகம் உழைக்க வேண்டியது அவசியம். விவசாயிகளுக்கு பாதிப்பங்கே கிடைக்கிறது கடனை

தீர்த்து அத்யாவசியப் பொருள்களை வாங்கியபின் மிஞ்சும் தானியம், வசந்தகாலம் முடியுமுன் தீர்ந்து போகிறது. ஆகவே மேலும் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது கடன்தொகையைவிடவட்டி இருமடங்காகும். இவ்வூரிலுள்ள விவசாயிகள் பலரும் கடன்பட்டு வருந்துவதைக் காண்கிறேன் அமெரிக்காவினின்றும் வரும் பழய(Second Hand) உடைகளையே அநேகமாய் ஈரானியமக்கள் அணிகின்றனர் அமெரிக்கா துணி கொடுத்து உதவுவதைக் கண்டு மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றனர் "ஈரானை மூன்று சாபக்கேடுகள் பீடித்துள்ளன. ஜுரம், கடன், சாலைகள் இல்லாமை இம்மூன்றும் ஈரான் மக்களின் பீடைகளாகும்" என்றார் ஒருவர் இவ்வூரில் தொண்ணூறு சதமானவர் மலேரியாவால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர் அவர்களில் சிலருக்கே கொய்னா கிடைக்கிறது. ஈரானிய வறுமையின் ஓர் சாதாரண காட்சியே மேலே வர்ணித்துள்ளேன். இதைப் படிப்பவர்கள் இத்துடன் நின்றுவிட்டால் போதும் என்று எண்ணுவர் என்பது திண்ணம். ஒருபுறம் மன்னரின் திருமணம் கோலாகலமாய் கொண்டாடப் படுகிறது. மறுபுரம் மக்கள் வறுமையால் வாடி திண்டாடுகின்றனர் மன்னரின் அதி விமரிசையான மணமே. ஈரானிய மக்களின் வருமைப் பிணத்தை மேலும் நாரி நாற்றமெடுக்கச் செய்யக்கூடிய முக்கிய காரணத்தை விளக்கச்செய்ய வல்லது

நாணயத்தின் ஒரு பக்கத்தை மட்டும் பார்ப்பது சரியல்ல. இரு பக்கத்தையும் ஆராய்ந்தபிறகே அதன் தரத்தை நிர்ணயிக்க முடியும். இரு பக்கமும் சரியாக அமையவேண்டும். ஆனால் ஈரான் நாட்டின் இரு பக்கங்களும் பரஸ்பரம் ஒற்றுமையின்றி இருப்பதற்குக் காரணமென்ன? ஒற்றுமையில்லாதது மட்டுமல்ல நேர் எதிரான நிலைமை ஏன்? அதன் முடிவென்ன? ஈரான் ஒரு முஸ்லிம் நாடு சமீபத்தில் பாகிஸ்தானில் நடைபெற்ற முஸ்லிம் நாடுகளின் சம்மேளனக் கூட்டத்தில் முஸ்லிம்கள் இஸ்லாமிய போதனைகளைக் கடைபிடிக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது சகோதரத்துவ சமத்துவம் நிலைக்கச்செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது சமூக பொருளாதார சமத்துவம் நிலைக்க ஒவ்வொரு முஸ்லிமும் பாடு படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. இயற்கையானதும், சமூக சீர்கேடுகள் அனைத்தையும் போக்கக்கூடிய உண்மை நெறிமுறைகளை போதிக்கும் மார்க்கம் இஸலாம் ஒன்றே என்பதில் சந்தேகமில்லை இதை நாம் யாவரும் பூரணமாய் நம்புகிறோம் சூரியர் சந்திரர்போல் உண்மை என்று நம்புகிறோம். ஆனால் அத்தகைய உண்மையான முறைகள் இருக்கையில் இஸ்லாமிய நாடுகளில் நிலரும் அவல நிலமைக்கும் பொருளாதார சிக்கல்களுக்கும் வருமைக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் காரணம் என்ன? அவற்றில்சுகவாழ்வும், சுவர்க்கபோகமும் ஏற்படாதது ஏன்? முஸ்லிம்கள் யாவரும் ஏழை வரிகொடுக்கும் நிலைமையிலிருந்து ஏழைகளுக்கு தானம் செய்ய புறப்பட்டு ஏழை என்பரே காணாது போனகாலமும் முஸ்லிம்கள் கண்டுள்ளனர். எகிப்து, கிரேக்க நாடுகளினின்றும் ஏழை வரி கணக்குப் புத்தகங்களை ஒட்டகங்கள் சுமந்து வந்து, பாலைவனமாகிய அரேபியரையும் சுக வாழ்வு அளித்த காலமும் ஒன்று அதற்கு காரணம்? ஏனெனில் அக்கால மன்னர்கள் இஸ்லாமிய போதனைகளைப் பூரணமாய்க்கடைப்பிடித்து வந்தனர் வாழ்க்கையின் சகல துறைகளிலும் இஸ்லாமிய முறைகள் நிறைந்திருந்தன. தங்கள் கடமைகளை உணர்ந்திருந்தனர். கடவுளிடம் பயம் கொண்டிருந்தனர். முடிவுநாள் விசாரணையை நினைந்து அல்லும்பகலும் நடுங்கினர் உமர் பின் அப்துல்அஜீஸ் உமய்யா குலத்து மன்னராவர். அவர் இரவில் அரசாங்க வேலைகளை கவனிக்கையில் சர்க்காரால் அளிக்கப்பட்ட தீபத்தை ஏற்றிவைப்பார் அவ்வேலை முடிந்ததும் அதை அணைத்துவிட்டு சொந்த விளக்கை ஏற்றிக்கொள்வார் என்று சரித்திரம் கூறுகிறது. இவ்வித நேர்மைக்குக் காரணம், பொக்கிஷம் பொதுமக்களுக்கே சொந்தம் மன்னர் அதை சரிவர நேர்மையுடன் கண்காணித்து. பொது மக்களுக்கு நன்மைபயக்கும்காரியம் நிறைவேற்றிவைக்கும் பொதுஜன ஊழியனே ஆகவே அச்செல்வத்தை தன் சொந்தத்திற்கு செலவிட்டால் துரோகக்குற்றம் சாரும் என்ற எண்ணமே சரித்திர கால முஷ்லிம்களின் நேர்மைக்குக் காரணம்

ஈரான் மன்னர் தன் விவாகத்தின்போது தன் பொக்கிஷத்திலிருந்து அளவற்ற செல்வத்தை செலவிட்டார். ஆனால் அச்செல்வம் அவருக்கு எங்கிருந்து கிடைத்தது யாருக்கு சொந்தமானது? ஹாலந்தினின்றும் தருவிக்கப்பட்ட மலர்கள் யாருடைய பணத்தில் வந்தன? ஈரான் அரண்மனையின் படாடோபங்கள், வருமையால் வாடி உணவுக்கும் உடைக்கும் திண்டாடி வரிப்பணத்தைக் கொடுத்துவிட்டு பிச்சைக்கேட்டு வயிறுவளர்க்கும் நிலைமையில் பொது மக்களின் பணத்தாலல்லவோ நடைபெற்றன. இவ்வுண்மையை எவரும் மறுக்க முடியாது அப்பணம் விவசாய தொழிலுக்கு வேண்டிய நவீன இயந்திரங்கள், நோயாளிகளுக்கு மருந்து வகைகள் முதலியவற்றை தருவிக்கவும், சுகாதாரம் நிலவச் செய்யவும் கல்வி போதனைக்கும். செலவிடப்பட்டிருந்தால். ஈரான் புனித பூமி தங்கம் விளைந்திருக்கும். நெடுங்காலமாய் பொருளாதார சிக்கலில் சிக்கிக்கிடக்கும் மக்களுக்கு விடுதலை கிடைத்திருக்கும்; ரஸாஷா பஹ்லவியின் பெயர் வருங்காலத்தில் பொன்னால் எழுதப்படத் தக்கதாயிருந்திருக்கும். ஆனால் ....ஏதேச்சாதிகாரம் உலகைவிட்டு தொலையும் வரை அவ்வித நிலைமை ஏற்பட முடியாதென்பதற்கு ஈரான் மன்னரின் திருமணமே தக்க சான்று.

செய்திகள்.

பிராஞ்சு திறப்பு விழா.

——O——

பாம்பே ஐஸ் கூலிங் & சர்பத் கம்பெனி பிராஞ்சு பெரிய கடைத்தெரு பூக்கடை சமீபம் 30. நெ கட்டிடத்தில் திறக்கப்பட்டிருக்கிறது. பிரபலஸ்தர்கள் திறப்பு விழாவில் கலந்து ஆனந்தித்தனர்.

H. O. பாம்பே ஐஸ் கூலிங் & சர்பத் கம்பெனி,
103, பெரிய தெரு, கும்பகோணம்.

* * *

அறிக்கை நெ. 2

கீழ வீரராகவபுரம் — மேலப்பாளையம் கைத்தறி நெசவாளர் (காங்கிரஸ்) சங்கம் Regd. No. 1

வெளியீடு.

நெல்லை மாவட்ட நெசவாவாளர்களின் அறப்போரை நாங்கள் ஏன் ஆதரிக்கிறோம்?

கட்சிக் கொள்கை வித்தியாசம் முதலியன பட்டினிக்குக் கிடையாது 'வறுமை'' இதற்கெல்லாம் அப்பாலுள்ளது.

நமது நெல்லை மாவட்டத்தில், சுமார் 2½ வருட காலமாக நெசவாளர்களின் குடும்பங்கள் அடைந்து வருகின்ற இன்னல்கள் மனித உள்ளம் படைத்த யாராலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது என்பது தெளிவு பிரத்தியட்ச உண்மை கூட

கைத்தொழில்களின் அழிவு, தினம்தினம் அதிகரித்துக் கொண்டிருப்பது, நமது மாவட்டத்தின் பொருள் ஆதாரத்தையே அழித்துவிட்டது. அழித்துக் கொண்டேயிருக்கிறது

சமீபத்திலே, நமது நகரிலே நடந்த ஓர் நெசவாளியின் ''தற்கொலை ,,நம் அனைவரையும் குலுங்கச் செய்துவிட்டது.

இத்தனை அவதிகளையும், அல்லல்களையும் கண்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கும் நாங்கள் இந்த ,,உரிமை அறப் பொருக்கு உதவி செய்யாமல், ஆதரவு அளிக்காமல், எப்படி இருக்க முடியும்?

இது நிற்க:– நமது நகரத்திலுள்ள சில உத்தியோகப்பற்றற்ற பெரிய மனிதர்கள் கூட, கொஞ்ச காலமாக "நூல் வினியோகம் ஒழுங்காகக்கொடுக்கப்பட்ட வேண்டும்'' என்று அரசாங்கத்தாரை நிர்பந்தித்தும்கூட, அரசாங்கம் இப்பிரச்சினையில் அக்கறை எடுக்காமல் இருந்ததே நம் நெசவுத் தொழிலாளர்களை இந்த உரிமைப் போருக்குத் தூண்டிற்று. ஆகவே நாங்கள் மனிதர்கள். நெசவுத் தொழிலாளர்களும் மனிதர்கள். மனிதர்கள். வீதிகளிலே பிச்சை எடுத்துண்ணும் அவல நிலைமையையும் பட்டினியால் மடியும் பரிதாபகரமான நிலைமையையும், மனித உள்ளம் படைத்த எவரும் சகித்துக் கொண்டிருக்க முடியாத நிலைமையில்தான் இதை ஆதரிக்க நாங்கள் தயக்கமில்லாமல் முன் வந்துள்ளோம்.

தொழிலாளி மக்களாகிய ஏழை நெசவாளர்கள் நல் வாழ்வுவாழ, இவ்வுரிமைப் போராட்டம் வெற்றி பெற, எங்களின்முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் உங்களுக்குத்தருகிறோம்.

மற்றையோர்களும், தங்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் தங்கு தடையின்றிக் கொடுப்பார்கள் என்று நம்புகிறோம்.

பஞ்சம் ஒழிய, பட்டினி ஒழிய, போராட்டம் வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மேலப்பாளையம் } **ப. செ. அ. மகம்மது யூசுபு,**
26—2—1951 } தலைவர்.

* * *

தென்காசி தாலுகா வடகரை கிராம பொது ஜனங்கள் வள்ளக்குளம் அரிகேசவப் பேரி குளங்களை நஞ்சைபாசானத்துக்கும், வண்ணான் துறைக்கும் மாடு ஆடு மேயவும், பெருநாள் தொழுகையும், பள்ளிக்கூடத்து பிள்ளைகள் விளையாடவும், கலம், உரம், முதலிய சகல விதமான புழக்கத்துக்கும் ஜனங்கள் அனுபோகம் செய்துவந்தார்கள் தென்காசி ரிட்டயர்டு போலிஸ் சர்க்கிள் முகமது மீரான் மேலேகண்ட குளத்தில் சிலதை தனக்கு பரிவர்த்தனை கிடைத்திருப்பதாயும் அதைதான் அனுபோகம் செய்ய வேணுமென்றும் சுமார் மூன்றுமாதமாய் முயற்ச்சி பண்ணினார் அதன்பேரில் கிராம ஜனங்கள் ஜாதி, மத பிரிவின்றி ஹரிஜனங்கள் உட்பட 10,000 பதினாயிரம் ஜனங்கள் சட்டமறுப்புபண்ணுகிறதென்றும், கலகத்து மூலமாய் தடுக்கிறதென்றும் பரபரப்பு அடைந்திருந்தார்கள் தென்காசி போலிஸ் சர்க்கிள் **ஸ்ரீ ஆதித்தன்** அவர்கள் 28- -51ல் ஷை கிராமத்தில் வந்து ஜனங்களில் முக்கியஸதர்களை கூப்பிட்டு எவ்விதமான கிளர்ச்சியும் ஜனங்களை செய்யவேண்டாமென்றும், போலிஸ் பந்தோபஸ்துடன் இருக்கிற எள்ளுருக்காயை அருத்து தங்களிடத்திலேயே மத்தியஸ்தமாகயிருக்குமென்று வாக்குருதி சொன்னார்கள் கிராம ஜனங்கள் குழப்பம் அடையாமல் சமாதானப்படுத்தும்படி முக்கியஸ்தர்களை கேட்டுக் கொண்டார்கள் 3-3 51 போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரவர்கள், தலைமையின் கீழ் ஸப் இன்ஸ்பெக்டரவர்களும், சுமார் 30 போலிஸ் கான்ஸ்டேபிளும், தாலூகா மாஜீஸ்ட்ரேட்டரவர்களும் கிராமத்திற்கு வந்திருந்தார்கள். கிராம ஜனங்கள் பூராவுமேதங்கள் எல்லாவேலைகளையும் நிறுத்தம்செய்து

இருந்தார்கள். சமாதானத்திற்கு நியமிக்கப்பட்ட முக்கியஸ்தர்கள் ஜனங்களை அமைதியாக இருக்கும்படி வேண்டிக் கொண்டதினால் எவ்விதமான அசம்பாவிதமான செய்கையும் ஏற்படவில்லை எள்ளுகாய் அறுப்புக்கு 7 மைலுக்குள்பட்ட கிராமங்களிலிருந்து ஆள்வர மறுத்துவிட்டதின் பேரில் தென் காசியிலிருந்து சுமார் 60 முஸ்லிம் பெண்களும் 10 ஆண்களும் 2 லாரியில் கொண்டுவந்து உடனடியாக அறுத்து லாரியில் தென் காசிக்கு கொண்டுபோய் விட்டார்கள். மேலும் ஜனங்கள் பரபரப்படைகிறதினால் தாலூகா காங்கிரஸ்கமிட்டி மெம்பர் வடகரை ஜனாப் சே மு. பாசிந் அவர்கள் தலைமையின்கீழ் 7-மெம்பர்கள் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. ஷை கமிட்டி கனம் பிரதம மந்திரி அவர்களையும், மற்றும் மந்திரிகளையும் பார்த்து விபரங்களைதெரிவிக்கவும், மேல்நடவடிக்கை செய்யவும் கமிட்டிக்கு கிராமமக்கள் அனைவரும் அதிகாரம் கொடுத்திருக்கின்ர்கள்,

* * *

காரே குதர்க்கம்

கஷ்மீர் பிரச்னைக்கு பரிகாரம்படையெப்பொன்றே என்று பட்னாவில் 24 பிப்-யன்று பத்திரிகையாளரைச் சந்தித்தபோது ஹிந்துமகாசபைத் தலைவர் டாக்டர் காரே கூறினார் மேலும் " ஹிந்துமகாசபை வகுப்பு வாத ஸ்தாபனமல்ல. ஆகவே எல்லா சமூகத்தாருக்கும் நியாயமும், சமத்துவ உரிமைகளும் விரும்புகிறது. உண்மையில் வகுப்புவாத ஸ்தாபனம் காங்கிரசே அது இந்தியாவுக்கு தீங்கு விளைவித்துமுஸ்லீம்களுக்கு லாபம் தேடிதந்தது. அதன்போக்கினாலேயே நாடு துண்டாடப்பட்டது. இவ்விதம் இந்தியதாயின் சமாதிமீது தன் ஆட்சியின் அஸ்திவாரமிட்டது. முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் இஸ்லாம் ஆகியவற்றால் உலக அமைதிக்கு ஆபத்தேற்பட்டிருக்கிறது. கடந்த இரு உலக யுத்தங்களால் ஏகாதிபத்தியம் செத்துவிட்டு. இன்று முதலாளித்துவமும் குற்றுயிராய்க் கிடக்கிறது. ஆனால் இஸ்லாம் மறுபடியும் பிழைத்தெழ முயற்ச்சிக்கிறது அது தேசத்தை துண்டாடி ஓர் இஸ்லாமிய நாட்டை நிர்மாணிப்பதில் வெற்றியடைந்து விட்டது. இஸ்லாம் என்றும் பலாத்கார போக்கையே ஆதரித்தது இன்றும் அகில உலகையும்யுத்தநாடுகள்என்றும்முஸ்லீம்நாடுகளை மட்டும் அமைதியான நாடென்றும் கூறுகிறது. யுத்த நாடுகளை எவ்விதத்திலும் தங்களுடன் சேர்த்துக்கொள்ளவே விரும்புகிறது." காராச்சியில் சமீபத்தில் கூடிய உலக முஸ்லீம் மஹாநாட்டைக்குறிப்பிடுகையில்; இஸ்லாமை முறியடிக்க ஹிந்துக்கள் தயாராயிருக்க வேண்டும் அதற்கு ஹிந்துமகாசபை ஒன்றே தகுந்த ஸ்தாபனமாகும் ஹிந்துக்கள் யாவரும் ஒற்றுமையுடனிருக்க வேண்டும்," என்றார் காரே,

மேற்கூறிய அறிக்கையைக் கண்டால் சிறிப்பதா? அழுவதா என்று தெறியவில்லை. மகாசபைத்தலைவர்கள் தங்கள் அறிவு சூன்யத்தை பகிரங்கப்படுத்த கங்கணம் கட்டியுள்ளனர். அறிவுக் கெட்டாத வீண்பேச்சையே புலம்புவது என்று உறுதியுடனிருக்கிறார்கள் என்பதை காண சிறிப்பும்; ஜவஹரைப்போன்ற நேர்மையும் தீர்க்க தரிசனமும் மிக்க அரசியல் விவேகிகள் பிறந்தநாட்டில் இத்தகைய குழப்பவாதிகளும் அறிவிலிகளும் இருக்கிறார்களே என்பதை நினைக்கவும் துக்கம் தொண்டையை அடைக்கிறது. இத்தகையவர்கள் ஆட்சிபீடாத்திலமர்ந்தால் இந்தியாவின் கதி என்ன? ஜனநாயகம் படுகுழியில் புதைக்கப்படும் மானிடவர்க்கம் உய்யவழி எங்கே இருக்கப்போகிறது? என்பதை நினைக்கும்போது நடுக்கம் ஏற்படுகிறது. காங்கிரஸ் வகுப்பு வாதஸ்தாபனம் என்றும் காரே குறை கூறுகிறார் அவர்முகம் அவரால் பார்க்க முடிந்தால் பார்க்கட்டும் எவ்வளவு கொடூரம் அங்கு குடி கொண்டிருக்கிறது என்பதை அறிந்துக் கொள்வார் இந்திய முஸ்லீம்கள் தாராளமாய் நடமாடமாவும் முடியாது தவித்துக்கொண்டிருக்கும்நிலைமையை ஏற்படுத்திவிடுவதே ஹிந்து மகாசபை அளிக்கும் சமத்துவமோ? பசுவதை என்ற வதந்தியை பரவச்செய்து ஒருபாவமும் அறியாத முஸ்லீம்களை கொலைசெய்வதும் கொள்ளையடிப்பதும் நியாயமோ? என்பதை ரத்த கறை படிந்த தன்கரங்களைப் பார்த்துக் கேட்கட்டும் முஸ்லீம் வீடுகளை தீயிட்டு பொசுக்குவதும் ஆலயங்களை அவதூறு செய்வதும், இடிப்பதும் தான் நேர்மை என்பது வகுப்புவாத இதயதுடிப்பிடம் கேட்கட்டும். பாகிஸ்தான் தோன்றியது காங்கிரஸின் போக்காலல்ல. ஹிந்துமகாசபையின் குறுகிய மனப்பான்மையும் முஸ்லீம்களிடம் கொண்டிருந்த வெருப்புமே காரண்ம். இஸ்லாம்என்றும் பலாத்காரத்தை ஆதரித்துள்ளது என்று காரேஜி கூறுகிறார். ஆகவே அதை எதிர்க்க ஹிந்துக்கள் ஒன்றுபட வேண்டும் என்கிறார் ஹிந்துக்கள், ஹந்துமதம், ஹிந்து கலாச்சாரம், நாகரீகம் முதலியவற்றின்மீது தினசரி தாக்குதல் நடக்கும் ஒரு நாட்டை அவர் கூறமுடியுமா? ஆனால் இங்கு கடந்த ஒன்றரைமாதத்தில் ஹோலிபண்டிகைக்கு முன் முஸ்லிம்கள் இரத்தத்தால் ஏழு இடங்களில் ஹோலி கொண்டாடப்பட்டது. ஆனால் இந்தோனேஷியா முதல் மொராக்கோ வரையில் எங்காவது ஹிந்துக்களை துன்பப்படுத்தியதுண்டா? கொலை செய்தனரா? கொள்ளையடித்தனரா? இன்று அப்கானிஸ்தான், ஈரான், பஹ்ரைன் முதலிய பற்பல முஸ்லிம் நாடுகளிலும் பலகுடும்பங்களாய் ஹிந்துக்கள் வாழ்கின்றனர் யாவரும் சுகமாக எவ்வித கவலையுமின்றி இருப்பதை காணலாம் அவர்கள் அங்கும் வர்த்தகத்தி லீடுபட்டு செல்வம் சம்பாதித்து, அண்டை அயலார் முஸ்லிம்களுடன் நேசமாயும் அன்பாயும் இருக்கின்றனர் ஆனால் அவர்கள் உயிர் பொருள் முதலியவற்றை கொள்ளை

யடித்தசெய்தி கிடைக்கவில்லை. எதாவதொரு இஸ்லாமிய நாட்டில் ஹிந்து தர்மத்திற்கெதிராக எதாவது புத்தகம் வெளியாகியுள்ளதா? என்பதை காரே கூறட்டும். செய்தித்தாள்களில் ஹிந்து தர்மம், நாகரீகம்முதலியவற்றை எளனம் செய்யும் வகையில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகி இருக்கிறதா? ஆனால், இங்கு இந்தியாவிலோ பாடசாலைப் புத்தகங்களும், இஸ்லாம் முஸ்லீம் அரசர்கள் பெரியார்கள் முதலியவற்றை ஆபாசப்படுத்திக் கூறும் பாடங்கள் நிறைந்து கிடக்கின்றன. அவையே போதனா பாடப்புத்தகங்களாயிருக்க வேண்டும் என்று காரே போன்றவர்கள் வர்புறுத்துவது தினசரி நிகழும் சாதாரண நிகழ்ச்சியாகும் இது இஸ்லாமியபலாத்காரத்தின் பயனா? அல்லது ஹிந்துமகாசபையின் போக்கின் விளைவா? என்பதை காரேஜி கூறுவாரா?

25-பிப்ரவரி மிர்ஜாபூர் ஹிந்துமகாசபை மகாநாட்டில் செய்யப்பட்ட பிரசங்கக்கள் பலவும், நிறைவேறிய தீர்மானங்கள் யாவும், காரே அகராதியில் சமத்துவம் நியாயம் என்ற பதங்களுக்கு கூறப்பட்டுள்ள பொருளின் உண்மை என்ன என்பதை அம்பலப்படுத்துகின்றன "எத்தகைய எதிர்ப்பு இருந்தாலும், யார் எவ்விதம் குறை கூறினாலும், ஹிந்துமகாசபை ஹிந்து ராஜ்யம் ஸ்தாபித்தே தீரும். எனெனில் இந்தியா ஹிந்துக்களுக்குமட்டும் சொந்தம்;'' என்று கூறினார் தேஷ்பாண்டே. பாண்டே அபிப்ராயத்தை'' முராதாபாத் மகாநாட்டின்போது பார்லிமெண்டரி ரீதியில் அதாவது சட்டசபை, ஜில்லாபோர்டு முதலியவற்றிற்கு நடக்கும் தேர்தலில் ஹிந்துக்களல்லாதாரும் ஹிந்து மகாசபை சார்பில் போட்டியிடலாம் என்று நிறைவேறிய தீர்மானத்தை உ. பி மகாசபையின் இம்மஹாநாடு ரத்து செய்கிறது.'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இத்தீர்மானம், ஹிந்து அல்லாத சிறுபான்மையுடன் எத்தகைய நியாயம். சமத்துவமுறை மேற்கொள்ளப்படும் என்பதை தெளிவாக்கி விடுகிறது சுருக்கமாக ஹிந்துபான்மையை சேராத ஒருவர் எத்தகைய நிற்வாக, அரசியல் திரமைகொண்டவராயினும் முக்கிய ஸ்தானத்தில் அமர்த்தப்படமாட்டார் என்பதே அத்தீர்மானத்தின் கருத்தாகும். இதுதான் காரேஜிகூறும்நியாயமும் ஹிந்துமகாசபை அளிக்கும் சமத்துவமுமாகும்.

வகுப்புவாதிகள் விளைவிக்கும் இக் குழப்பத்தினூடே லக்னோவில் மஷ்ரூவாலா, ஆச்ஷே பிரஹ்மச்சரி முதலியதலைவர்கள் தலைமையில் கூடும் ஜனநாயக வாதிகளின் மகாநாட்டிற்கு அதிக அவசியம் ஏற்படுகிறது. தேர்தல் சமீபித்ததும் மகாசபையாரின் ரத்தவெறியும் அதிகரிக்கும். அவர் காங்கிரஸ் சர்க்காரை களங்கப்படுத்த குழப்பங்களை தூண்டுவர். முஸ்லிம்களுக்கெதிராக ஹிந்துக்களை ஒன்றுபட அழைப்பர். அவகளிடம் எவ் த பொருளாதார திட்டமுமில்லை. எவ்வித அரசியல் கொள்கையுமில்லை எவ்வித வாழ்க்கைத்திட்டமுமில்லை. குழப்பம், கலவரம் முதலியவையே அவர்களுக்கு அரசியல் அவையே நாகரீகம் என்பர். குறுகிய மனப்பான்மை, வகுப்புவாதமே அவர்களின் சிறப்பு. இக்குழப்பவாதிகளை நேர்மையுள்ள ஆட்சியாளர் எல்விதம் அடக்கப்பேரகின்றனர் என்பதை பார்க்கவேண்டும். லக்னோ மகாநாடு வெற்றிபெறவும், அதன் தீர்மானங்கள் அமுலாக்கப்கடவும் வகுப்புவாத இருள் சூழ்ந்த சூழ்நிலையை மாற்றியமைக்க எவ்வித போக்கை மேற்கொள்வர் என்பதை பார்க்கவேண்டும், எனெனில் அவர்களுக்குஇருக்கும் கடமை உணர்ச்சி, ஜனநாயக அபிமானம் முதலியவற்றைப் பொருத்தே, நாட்டின் சமாதனமும் தற்கால வருங்கால சுபிட்சமும் உண்டு என்பதைஆட்சியாளர் அறிந்துகொள்வது நலம்.

* * *

ஸ்ரீ மஜூம்தார் குடந்தை விஜயம்

கும்பகோணம் மார்ச்சு 23, அகிலபாரத சர்கா சங்கத்தலைவரும் காந்திஜி சிடருமான ஸ்ரீ மஜூம்தார் இன்றுஇங்கு விஜயம், செய்தார். காலை முதல் மாலை வரையில் பலநிகழ்சிகளுக்கு ஏற்பாடாகி யிருந்தது. ஒவ்வொரு சமயத்திலும் எற்றாற் போல் புரிந்த பிரசங்கங்கள் காந்திஜி பாணியை நினைவூட்டியது. மாலை 6 30க்கு உயர்தர பாடசாலை மைதானத்தில் நிகழ்ச்சியை பிரசங்கத்தில் தற்காலம் நம்மைநோக்கியுள்ள பல்வேறுபிரச்னைகளைப் பிரஸ்தாபிக்கையில்". இன்று தேசத்தை எதிர்நோக்கியுள்ள பல் வேறு தொல்லைகளும் காந்திஜி வழியை நாம் புரக்கனித்த தால் தோன்றியவையே. சுதேசி ராஜ்யம் ஏற்பட்டு விட்டபோதிலும்சுயராஜ்யாம் ஏற்படவில்லை. எழுலட்ச கிரமங்களில் வாழும் மக்களிடம் சென்றால் சுயராஜியத்தால் நமக்கு என்ன பலன் கிடைத்தது. இதைவிட வெள்ளையர் ஆட்சியே தேவலை என்று அவர்கள் கூறுகிறார்கள். நாட்டில் பஞ்சமும், வேலையில்லாத்திண்டாட்டமும் படாதபாடு படுத்தி வருகிறது. காந்திஜி காட்டிய வழியைப்பின்பற்றினால் அவற்றிர்க்கு முடிவு கட்டிவிடலாம். ஆனால் நம் இதயங்களில் காந்திஜி யிருப்பினும் சிந்தனையில் வெள்ளையரே யிருக்கின்றனர். டில்லி சென்னை போன்ற முக்கிய பட்டணங்களில் சுயராஜ்யம் கிடைத்துள்ளதைக் காணமுடியும் ஆனால் கிராமாந்திரங்களில் அந்த நிலைமை ஏற்படவில்லை. அங்குதான் சுதந்திரத்தின் தக்கபலன் ஏற்படவேண்டியது. ஆகவேதான் எழுலட்சம் தொண்டர்கள் வேண்டும். அவர்களைக் கொண்டு உண்மை இந்தியதன்மை குடிகொண்டுள்ள கிராமங்களின் அவநிலமையை கீர்படுத்தப்பாடு படுவேன் என்று காந்திஜீ கூறிவந்தார். இன்னும் காந்திஜி மேற்கொள்ள நினைத்த அக்காரியத்தை நாம் பூர்த்தி செய்தால் சுதந்தரவாழ்வின் பூரண பலனை அடைய முடியும் சினகிராமங்களில் சுதந்தர உணர்ச்சி வெள்ளம் மக்களை உற்சாகமூட்டி வந்தது. ஆகவேதான்

ஏழாண்டு போர் நடைபெற்ற போதிலும் நாட்டுக்கு ஆபத்து ஏற்படவில்லை. ஆனால் ஜப்பானே ஒரேகுண்டால் அழிந்து விட்டது. காரணம் கிராமங்களில் சுயராஜ்யமே காணமுடியாததே" என்று ஹிந்தியில்கூறியதை ஜி. சுப்ரமணியம் அவர்கள்மொழிபெயர்த்தார்.

"மாலைகள் அணிவிப்பதும், வரவேற்புரைகள் வாசித்தளிப்பதும் அடிமைச் சின்னங்களாகும் ஆகவே அவற்றை விட்டொழிப்பதே நலம்." என்றார் ஸ்ரீ மஜூரம்தார்.

" சர்க்கா இயக்கமும், குடிசைத் தொழிலும் வளர்வதாலேயே தேசத்தின் பல் வேறு பிரச்னைகளும் தீரும் என்பதை ஆதார பூர்வமாய் எடுத்துரைத்தார்.

வந்தனோபசாரம் கூறப்பட்டபின் கூட்டம்இனிது முடிவுற்றது

* * *

சந்தாதார்கள் -
விளம்பரம் கொடுக்கும் அன்பர்கள்,
- ஏஜெண்டுகளுக்கு.

சீரிய சிந்தனைகள், உயரிய அரசியல் கருத்துக்களை அள்ளிக் கொடுப்பதில் நிகரற்று விளங்குவதைப் போலவே, "ஆஸாத்" எடுப்பாக கண்ணைக் கவரும் அமைப்புடன் வெளியிடப்பட வேண்டுமென்பது நம் அவா. சொந்தமாக ஒரு அச்சுக்கூடம் இல்லாமல் அவ்வித மாறுதல்கள் சாத்தியமில்லை. ஆகையால் அச்சுக்கூட ஏற்பாடுகள் பூர்த்தியாகும் வரை " ஆஸாத் " மாதமிருமுறைதான் தங்களை சந்திக்குமென்பதைதெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்,
" ஆஸாத் " கும்பகோணம்.

நாகரீகர்கள் தானா?

'மலேயாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திய நிர்வாகத்தார் ஜுந்துராம் என்ற ஓர் கிராமத்தை அடியோடு நாசம் செய்துவிட்டார்கள் கடந்தவாரம் ஒரு நாள் அதிகாலையில் அக்கிராமத்தில் போலீஸார் புகுந்தனர் 1500-குடி ஜனங்களை கேவலம் ஆடுமாடுகளைப்போல் இழுத்துக்கொண்டு அங்கிருந்து நூறு மைல்களுக்கப்பாலுள்ள ஓர் இடத்திற்குக் கொண்டு சென்றனர். அக்கிராம மக்களால் கொண்டுசெல்ல முடியாத பொருள்கள் ஏலம் விடப்பட்டு, 452-சதுர மையில்கள் பரவியிருக்கும்எல்லா வீடுகளும் இடித்து தரைமட்டமாக்கப்படும்." இச்செய்தியை பிரிட்டனின் சிறந்த் வாரப் பத்திரிகை மான்செஸ்டர்கார்டியன் பிரசுரித்துள்ளது.

இது சோஷலிஸ்டு சர்க்காரென தம்பட்ட மடிக்கும் அட்லி சர்க்கார் கையாளும் நவீன அக்கிரமமுறையாகும். பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வு இருக்கலாகாது என்று அட்லி அன்ட் கம்பெனியார் தொண்டைகிழிய கத்திக்கொண்டிருப்பது விசித்திரமானது. ஜுந்துராம் கிராமவாசிகள் செய்த அப்பெரும் பாபம் தான் என்ன? வேறொன்றுமில்லை அவர்கள் கம்யூனிஸ்டுகளிடம் அநுதாபம் கொண்டுள்ளனராம். ஆம்! அக்குற்றத்திற்கே இக்கொடுந் தண்டனையளிக்கப்பட்டிருக்கிறது. அக்கிரமவான்கள் வாழ்க !!

பிரிட்டனுக்கும் மலேயாவுக்கும் சுமார் பதினாயிரம் மைல் தூரமாகும். பிரிட்டிஷார் வெள்ளையர் மலேய மக்கள் மஞ்சள் கருப்பு நிறத்தவர் பதினாயிரம் மைலிலிருந்து ஒரு வெள்ளைக்கூட்டம் மலேயாவுக்கு வந்து, சுதேசிகள் வாழவும் முடியாது கொடுமை செய்கிறது. அதற்குக் காரணம் கம்யூனிஸ்டுகளிடம் அந்த அப்பாவி ஜனங்கள் அநுதாபம் கொண்டுள்ளனர் என்பதே. அத்தகைய சாதாரண குற்றத்திற்கு இவ்வளவு கடுமையான தண்டனையளிக்கப்படாது என்று நினைக்கலாம். ஆனால் வெள்ளைநிறத்தவருக்கு எத்தகைய கொடுமையிழைக்கவும் இந்நவீன காலத்தில் உரிமையுண்டு என்று வெள்ளை ஏகாதிபத்தியத்தார் நினைக்கின்றனர். ஐரோப்பியர் பல நூற்றுண்டுகளாய் தென்கிழக்கு ஆசியாவை கொள்ளையடித்துவருகின்றனர். இங்கிருந்து அவர்கள் ஈயம், ரப்பர், முதலிய கச்சாப் பொருள்களை அளவின்றி கொண்டு செல்கின்றனர். அதற்கு பதில் பசி பிணி, மரணம் முதலியவற்றை கொடுத்து விடுகின்றனர். இத்தகைய அவல நிலைமையில் வாழ எந்த நாட்டவரும் இசையமாட்டார்கள், நவீனகால விடுதலை இயக்கங்களால் மலேயாமக்களும் விழித்தெழுந்துவிட்டனர் அவர்கள் இத்தகைய அவநிலையில் இனி இருக்க முடியாதென்று தீர்மானித்துவிட்டனர். தங்கள் தாயகத்தை அந்நியர் பேய்ப்பிடியினின்றும் விடுவித்தே விடுவோம் என்று உறுதிபூண்டுள்ளார். இப்போக்கை

சாம்ராஜ்யவாதிகள் எவ்விதம் ஆமோதிக்க முடியும். மறைந்துவரும் ஏகாதிபத்தியம் உயிர் விடுவதற்குமுன் இத்தகைய கொடுமைகளைக் கையாள்கிறது மலேயா மக்களுக்கு பெரும் சோதனை காலம் என்பதை மறுக்க முடியாது. கம்யூனிஸ்டுகள் என்றும் கம்யூனிஸ்டு அனுதாபிகள் என்றும் கூறி ஜுந்துராம் மக்களை அடியோடு நாசம்செய்வது மரணத்திற்கு முன் ஏகாதிபத்தியம் செய்துவரும் கடைசி முயற்சியே. கடைசி முயற்சியென்று கூறவும் முடியாது இன்னும் எத்தகைய காட்டுமிராண்டித் தனங்கள் ஏகாதிபத்திய வெள்ளையர் மேற்கொள்ள முடியுமோ கூறமுடியாது கேவலம் விலங்கினர் போன்ற போக்கு கொண்டிருப்பினும் வெள்ளையர் தங்களை நாகரீகர்கள் என்றுகூறிக் கொள்வது விசித்திரமே.

* * *

ரஷியாவின் நோக்கம்
ஓராண்டில் உலகத்தையே அடிமைப்படுத்த திட்டம்

ரஷிய ராணுவ அதிகாரியின் மகன் வெளியிடும் தகவல்.

பர்லின் பிப்-28.

ஆஸ்டிரியா வந்துசேர்ந்த ஓர் ரஷ்ய அதிகாரியின் மகன்—" மார்ஷல்ஸ்டாலின் ஓராண்டுக்குள் அகில உலகையும் கைப்பற்ற தயாரித்துள்ள திட்டத்தை"— அம்பலப்படுத்திவிட்டான் என்று பிரிட்டிஷ் அனுமதிபெற்ற பர்லின் பத்திரிகையான "டீபீச்" பிரசுரித்திருக்கிறது. மார்ஷல் ஸ்டாலினின் அத்திட்டம் தரைப்படைகளால் அல்லது அவசியமாயின் ஜர்மன் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள ரேடியோவால் இயங்கும் அணுசக்தி ராக்கெட்விமானங்களின் உதவியால் நிறைவேற்றப்படும்.

வாஸ்லிலோஷெஸ்கோவ் என்றஅப்பையன் ரஷிய ராணுவ அதிகாரி ஒருவரின் மகன் என்றும், ஓடிவருவதற்கு முன் அவன் ரஷிய சுப்ரீம் பிளானிங் கமிட்டியின் அங்கத்தினராய் பத்து ஆண்டுகள் இருந்தான் என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

"ஸ்டாலின் திட்டப்படி ரஷியப்படைகள் இருவாரத்தில் ஐரோப்பாவை ஆக்ரமித்தபின் இங்லீஷ் கால்வாயை வந்தடையும் அதேசமயம் இங்லீஷ் கால்வாய் வழியாய் பிரிட்டிஷ் பண்டகள் நடமாடாதபடி செய்ய ஸ்பெயினில் பாராசூட்படைகள் இறக்கப்படும். வட ஆப்ரிக்கா ஈரான் சூயஸ் கால்வாய் ஆகிய இருபக்கத்திலிருந்தும் தாக்கப்படும். தூரக்கிழக்கில் அமெரிக்க பிரிட்டிஷாரை சிதறியடிக்கமுன் னூறு டிவிஷன் ரஷிய–சீன படைகள் பெரும் தாக்குதலை நடத்தும்" என்று அப்பையன் வாஸ்லி கூறியதாய் 'டீபீச்" பத்திரிகை கூறுகிறது,

வாஸ்லி கூறும் விவரங்களால் ஸ்டாலின் திட்டம் ஓராண்டில் நிறைவேறத்தக்கதே என்று கூறப்படுகிறது மேற்கூறிய ராக்கெட் விமானத்தின் விவரங்களையும் வாஸ்லி கொண்டு வந்திருப்பதாய்த் தெரிகிறது அமெரிக்காவைத் தாக்க அவ்விமானங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாம்- ஆனால் அவற்றை உற்பத்திசெய்யும் பெரிய தொழிற்சாலைகள் இன்று வரை ஏற்படவில்லை என்றும் வாஸ்லி கூறியதாய் அப்பத்திரிகை கூறுகிறது

908 முஸ்லிம்கள் பாக்கிலிருந்து வாபஸ்.

லாஹூர் பாவ்லி அகதி காம்பினின்றும் 908முஸ்லிம் அகதிகளின் ஓர் கூட்டம் இந்திய-பாக். எல்லையை ததாண்டி இந்தியாவந்தடைந்தது- அவர்கள் யாவரும் ஸ்பெஷல் ரயில்மூலம் உத்தரப் பிரதேசத்திலுள்ள அவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

இருபதாயிரம் முஸ்லிம் அகதிகளை பாக் கினின்றும் அழைத்து, இந்தியாவில் குடியேற்ற இந்திய சர்க்கார் கொண்டுள்ள திட்டப்படியே மேற்கூறிய 908-பேரும் அழைக்கப்பட்டனர் இவர்கள் கடந்த ஆண்டு நடந்த உ பி. கலவரங்களின் போது பாக்· சென்றவர்களாவர்.

ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும்,
விபரங்களுக்கும்
கீழ்காணும் விலாசத்திற்கு எழுதுங்கள்.

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்,

Ested. 1925

வி. எஸ். & சன்ஸ் பெப்பர்மெண்டுகள்

பொதுமக்களால் ஆதரிக்கப்படுவதற்கு

அதன் குணம்!

மணம்!!

மதுரம்!!!

இவைகளே அத்தாக்ஷி.

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை
கும்பகோணம்.

டாக்டர். ஏ. மதுரம் சன்ஸ்,

60 YEARS NAME AND FAME

GURU

குழந்தைகளுக்கு
கைகண்ட மருந்துகள்

1. கஸ்தூரி மாத்திரை
2. கோரோஜனை மாத்திரை
3. ஹெல்த் மாத்திரை
4. பால் உப்பு
5. வேப்பெண்ணை தைலம்
6. குரு தைலம்
7. குரு பாலர் டானிக்
8. கக்குவான் மருந்து

குரு தைலம்
மகா சஞ்சிவி.

குரு மருந்துசாலை, : திருச்சினுப்பள்ளி.

• குரு பல்பொடி சகல தந்த ரோகங்கள் தீரும்.

வெற்றியைப் பிரியர்களே!
எங்கும் புகழ்பெற்றதும்,
யாவரும் விரும்பக்கூடியது
மான, எங்கள் காரம், குணம்,
மணம் மிகுந்த

தங்க விலாஸ்
புகையிலையையே

எப்பொழுதும் -
- உபயோகியுங்கள்

தங்கவிலாஸ் புகையிலை தயாரிப்பவர்கள்:—

M. A. ரெஜாக் & கோ
கும்பகோணம்.

Registered No 2058

தந்தி விலாசம்:— "கோகுல்" ஸ்தாபிதம் 1909 டெலிபோன் நெ. 57

டி.எஸ்.ஆர்.அண்.கோ.

கும்பகோணம்.

பிராஞ்சு:— மதராஸ் & மன்னார்குடி.

சந்தனாதித்தைலம், அரைக்கீரை விதைத்தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும் குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை

மற்றும்

கோகுல் ஊதுவத்திகள், பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, வாசனைப்பாக்கு, வாசனை சுண்ணாம்பு, அரகஜா முதலிய இதர சாமான்களும் கிடைக்கும்.

பீடி சக்கரவர்த்தி

RAMSAIT BEEDI

த.பி.சொக்கலால்

ராம்சேட் பீடி

முக்கூடல்

த.பி.சொக்கலால் ராம்சேட் பீடி முக்கூடல்

Printed by V. Jayaram at Sri Rama (Power) Printing Works, 38, Sarangapani East Vadamboki St, Kmu.
Edited and Published by Moulana Abdul Hakeem, 4, Kumbeswaran South, Kumbakonam.